பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

கடர்:6 பிரமோதூத ஷூ மாசி மீ 24 உ வெள்ளிக்கிழமை (08-03-1991) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:101

# காபந்து பிரதமர் பதவி சந்திரசேகர் வசமே?

## மட்டக்களப்பு பகுதியில் இரு சிப்பாய்கள் பலி

யாழ்ப்பாணம், மார்ச் 8

மட்டக்களப்பு மாவட்டத்தில் மங்கள ஓயாவுக்கும் 19 ஆம் கட்டைக்கும் இடையில் நேற்றுக்காலை 8-45 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் இராணுவச் சிப்பாய்கள் இருவர் உயிரிழந்தனர்.

சிப்பாய்களிடமிருந்து ரி 56 ரகத் துப்பாக்கி- ஒன்று, ரி 56-2 ரகத் துப்பாக்கி- ஒன்று, மகஸின் - ஐந்து, ரவைகள் — 111 ஆகியன விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டன.

இந்த மோதல் சம்பவத்தின் போது அகிலன் என்ற போராளி வீரமரணமடைந்தார். [உ]

## அமைச்சர் மாறினாலும் நடவடிக்கை மாறாதாம்

கொழும்பு, மார்ச் 8

"பாதுகாப்புத் துணைஅமைச்சராக புதியவர் பதவி ஏற்றிருந்தாலும், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவம் பின்பற்றி வரும் நடவடிக்கைகளில் மாறுதல் எதுவும் இராது."

— பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க இவ்வாறு கூறினார் என்று இந்திய வானொலி அறிவித்தது.

மன்னார் மாவட்டம், மடுதேவாலயப் பகுதியில் இராணுவத்தினரின் கூட்டு நடவடிக்கைத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப் படும் என்றும் ஜெனரல் ரணதுங்கா செய்தியாளர்களிடம் தெரிவித்தார். [உ-எ]

## காரைநகரில் ஷெல் வீச்சு; பலர் காயமுற்றனர்

யாழ்ப்பாணம், மார்ச் 8

காரைநகர் படை முகாமில் இருந்து நேற்று மாலை 4 மணியளவில் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி [ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கிழவன்காடு கதிர்காமசுவாமி கோவில் முன்பாக விழுந்த ஷெல்லினால் கோவில் குருக்கள் உட்பட பலர் காயமடைந்தனர். கோவில் மடப்பள்ளியும் சேதமடைந்தது.

காயமடைந்த கோவில் குருக்களான சிதம்பரப்பிள்ளை ஆறுமுகக்குருக்கள் [62 வயது]. சண்முகம் கனகம்மா [60 வயது]. சபாரத்தினம் சண்முகரத்தினம் [35 வயது]. நடராசா சிவகௌரி [17 வயது] ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். காயமடைந்த மற்றும் சிலர் காரைநகர் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டனர். [ஓ-15]

## நாளை முதல் ரூ. 4-50

பத்திரிகைத் தாள் மற்றும் அச்சகப் பொருள்களுக்கும், எரிபொருள் வகைகளுக்கும் நிலவும் தட்டுப்பாடு, விலை உயர்வு காரணமாக உதயனை வெளியிடுவதற்கான ஆகு செலவு அதிகரித்துள்ளது.

அதன் பொருட்டு உதயனின் விலையை நாளை [9-3-1991] சனிக்கிழமை முதல் 4 ரூபா 50 சதமாக உயர்த்த வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகி உள்ளோம்.

இதுவரை நல்கிய ஆதரவையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்து வழங்குமாறு வாசக அன்பர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

## முச்சந்தி முரளி



விஜேதுங்காவுக்கு தப்புத் தாளம் எல்லோ போடுறார் உவர் ரணதுங்கா....!

## ஜனாதிபதிக்கு வலியுறுத்து

புதுடில்லி, மார்ச் 8

இந்திய நாடாளுமன்றத்துக்கு பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தும்படியும் அதுவரை பிரதமர் சந்திரசேகரை காபந்து பிரதமராக செயற்பட அனுமதிக்கும் படியும் இந்திரா காங்கிரஸ் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் ஜனாதிபதி வெங்கட்ராமனை வலியுறுத்திக் கேட்டிருக்கின்றன.

ஜனதா தள் கட்சி தலைமையிலான தேசிய முன்னணியில் இடம்பெற்றிருக்கும் கட்சிகள், இடதுசாரிக் கட்சிகள், பாரதிய ஜனதா கட்சி, திரு. சந்திரசேகர் தலைமையிலான ஜனதா தள் [சோஷலிஸ்] கட்சி ஆகியனவே கூட்டாக இக் கோரிக்கையை விடுத்திருக்கின்றன.

இந்திய நாடாளுமன்றத்தில் அரைவாசிக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

"பொதுத்தேர்தலை அறிவியுங்கள். பின் கதவால் புதிய அரசு ஒன்று உருவாக அனுமதிக்காதீர்கள்" என்று இக் கட்சிகள் ஜனாதிபதியைக் கேட்டிருக்கின்றன.

வரவு செலவுத் திட்டத்துக்குப் பதிலாக சந்திரசேகர் அரசு சமர்ப்பித்துள்ள இடைக்காலகணக்குஅறிக்கை

[2ஆம் பக்கம் பார்க்க]

# புதுமைப் பெண்ணை உருவாக்கும் புரட்சி மேலும் தொடர வேண்டும்

## மகளிர் தினம் குறித்து பிரபா அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 8

ஒரு புதுமைப் பெண்ணை, ஒரு புரட்சிகரப் பெண்ணை எமது விடுதலை இயக்கம் படைத்திருக்கிறது. தமிழீழத்தில் இந்தப் புரட்சி தொடர வேண்டும். மேலும் மேலும் புரட்சிப் பெண்கள் எமது விடுதலை இயக்கத்தின் பின்னால் அணிதிரள வேண்டும். போராட்டம் மூலமாகவே நாம் தேச விடுதலையையும், பெண்விடுதலையையும் வென்றெடுக்க முடியும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அனைத்துலக மகளிர் தினம் தொடர்பாக விடுத்த அறிக்கையில் மேற்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பேச்சு மூலம் தீர்வு காண அரசு உறுதியாக உள்ளது

### விஜேதுங்க சபையில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 8

★ மோதிக்கொள்வதற்குப் பதிலாக பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் முயற்சியில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது.

★ இராணுவத் தீர்வை நாம் ஒரு போதும் நாடவில்லை.

★ பேச்சுவார்த்தைகளுக்கு

என்பதைத் தெட்டத் தெளிவாகக் கூற விரும்புகின்றேன்.

—பிரதமரும், நிதி அமைச்சரும் புதிய பாதுகாப்பு துணை அமைச்சருமான டி. பி. விஜேதுங்க நேற்று நாடாளுமன்றத்தில் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறி

[2 ஆம் பக்கம் பார்க்க]

## இரு போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

நேற்று நண்பகல் 11-15 மணியளவில் பலாலி முகாம் இராணுவத்தினருடன் நடந்த மோதலில் விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் வீரமரணமடைந்தனர்.

காராளசிங்கம் [முருகேச

[2 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'A' LEVEL CENTRE

Point Pedro Road, (1st Lane)
[Near to Mack Travels]
Jaffna.

**Special Spoken English Classes**
( With Grammar )
By New and Quick Methods
MR. A. REGINALD
[Foreign Trained English Tutor]

Commencing on :
9-3-1991 (Sat.) 2-00 p. m.
Sat. & Sun. 2-00 p. m.
[C/5826]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

08-03-91

திருமதி பரிமளம் கணபதிப்பிள்ளை
[ஆசிரியர்]

தோற்றம்: 1921 - 06 - 21
மறைவு: 1991 - 02 06

அம்மா என்று அழைக்க - எம்மை
ஆசையாய் அரவணைத்த எங்கள்
இல்லத்து ஒளி விளக்கே

எம்மை பிரிந்து இன்று முப்பத்தொரு நாளம்மா
ஏதம்மா எமக்கு இதைத் தாங்கும் இதயம்
மீண்டும் ஒரு முறை பிறவாயே தாயாக.

உன் பிரிவால் துயருறும்
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள்
சகோதரி, சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்
[16074]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 27 - 05 - 1936

மறைவு: 28 - 02 - 1989

திதி: 08 - 03 - 1991



### Dr. K. A. தர்மலிங்கம்

எங்கள் அன்புத் தெய்வமே, ஐயா!
உங்கள் புன்னகை தவழும் இனியமுகம்
எம் கண்களில் தெரிகின்றதே, ஐயா!
உங்கள் இனிய குரல், ஓசை
எம் காதுகளில் ஒலிக்கின்றதே, ஐயா!
எம்மை நீங்கள் ஆறாத்துயரில் ஆழ்த்திச்
சென்று ஆண்டு இரண்டாகிறது.

எம்மையெல்லாம் அன்புடனும் பண்புடனும்,
பாசத்துடனும் வாழ வைத்த தெய்வமே!
எங்கள் இதயத்தில் என்றும் உங்கள்
நினைவுகள் நீங்காது நிலைத்திருக்கும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

உடறணி,
வல்வெட்டித்துறை.
[16043]

## பரிசளிப்பு விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். இலக்கிய வட்டத்தின் இலங்கை இலக்கியப் பேரவை, நடாத்தத் திட்டமிட்டிருந்த பரிசளிப்பு விழா ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற ஏற்பாடாகி இருந்த பிரஸ்தாப விழா இப்போதைய சூழ்நிலை காரணமாக மறு அறிவித்தல்வரை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக பேரவை வட்டாரங்கள் தெரிவித்தன.

[அ]

## சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். இந்துக் கல்லூரி ''இல்ட்'' மாணவருக்கான சான்றிதழ் வழங்கலும், சஞ்சிகை வெளியீடும் நாளை 9ஆம் திகதி பிற்பகல் 4-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

[இ]

## இரு போராளி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யோகராசா - இயக்கச்சி], மௌலி [தம்பிராசா தங்கேஸ்வரன் - வெல்லாவெளி], மட்டக்களப்பு] ஆகியோரே அந்த இரு போராளிகளும் ஆவர்.

[ஒ]

## காபந்து....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மற்றும் அத்தியாவசிய சட்டமூலங்கள் நிறைவேற்றப்படாத நிலையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் அது அரசமைப்புச் சிக்கல்களை உருவாக்கும் என்று சட்ட அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் முடிவை மேற்கொள்ள முடியாத நிலையில் ஜனாதிபதி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சிக்கலைத் தீர்ப்பது பற்றி ஆராய்வதற்காக சர்வ கட்சிக் கூட்டம் ஒன்று சபாநாயகர் ரபிராய் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்திலேயே பல கட்சிகளும் நாடாளுமன்றத்தைக் கலைத்து, சந்திரசேகரைக் காபந்து பிரதமராகச் செயற்பட அனுமதிக்கும்படி வலியுறுத்தின.

இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி புதிய அரசு ஒன்றை அமைப்பதை அல்லது அவர் காபந்து பிரதமராகச் செயற்படுவதை இக்கட்சிகள் முழுமூச்சாக எதிர்த்தன.

எதிர்வரும் திங்களன்று நடாளுமன்றைக் கூட்டுவது என்றும்—

அக் கூட்டத்தில் அவசர—அத்தியாவசிய— விடயங்கள் தொடர்பான சட்ட மூலங்களை நிறைவற்றுவது என்றும் இக் கட்சிகள் முடிவு செய்தன.

அதனால் திங்கள் வரை இந்திய நாடாளுமன்றம் [illegible] ...து [illegible] ...க்கப்பட்டது.

[உ-எ-3]

## காங்கேசனிலுள்ள வங்கிக்கு அதிகாரிகள் சென்றனர்

காங்கேசன்துறையிலுள்ள - இலங்கைவங்கிக் கட்டடத்துக்கு நேற்றுச் சென்ற வங்கி அதிகாரிகள் குழுவினர் முக்கிய சில ஆவணங்களை எடுத்து வந்தனர்.

கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதி பெற்று, செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளின் உதவியுடன் வங்கி முகாமையாளர் தலைமையில் குழுவினர் சென்று வந்தனர்.

இலங்கை வங்கியின் காங்கேசன்துறைக் கிளை தற்பொழுது மானிப்பாயில் இயங்கி வருவது தெரிந்ததே.

[ஓ-15]

## ராஜீவ் - வெங்கட் பேச்சு

இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்திநேற்று [வியாழன்] காலை ஜனாதிபதி வெங்கட்ராமனைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

பின்னர் திரு. ராஜீவ் காந்தியைச் செய்தியாளர்கள் சந்தித்தனர்.

''பொதுத் தேர்தல் நடத்துவது பற்றியோ, அப்படி பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படும் பட்சத்தில் காபந்து பிரதமராகப் பதவி ஏற்பது பற்றியோ ஜனாதிபதியுடன் நான் பேசவில்லை, —இப்படி திரு. ராஜீவ்காந்தி சொன்னார்.

## பேச்சு மூலம் தீர்வு.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யதாவது:-

பாதுகாப்பு துணை அமைச்சராகச் செயற்படும் பொறுப்பும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு, பொறுமை, அவதானத்துடனான பரிசீலனை ஆகியவற்றுடன் இப் பொறுப்பினை சிறப்பாக நிறைவேற்றவேண்டும் என்பதை நான் உணர்ந்துள்ளேன்.

மோதிக்கொள்வதற்குப் பதிலாக பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் முயற்சியில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது.

எமது பிரச்சினைகளுக்கு கருத்து உடன்பாடு, சமரசம், கலந்தாலோசனை மூலம் தீர்வு காணுவதிலும் நாம் ஈடுபட்டுள்ளோம்.

அச்சுறுத்தலையும் வன்செயல்களையும் எதிர்நோக்கும்போது எமது இலட்சியங்களைத் தியாகம் செய்துவிடுவோம் என்பது இதன் கருத்து அல்ல.

இந்தக் கொள்கையின் அடிப்படையில் தான் விடுதலைப்புலிகளையும் ஜே.வி.பி.யினரையும் ஜனாதிபதி பேச்சுக்களுக்கு அழைத்தார்.

ஜே வி.பி.யினர் இதற்கு சம்மதிக்கவில்லை. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு அவர்கள் பெரும்பாலும் முன் வந்தார்கள் என்றே கூற வேண்டும்.

ஆனால் துரதிஷ்டவசமாக எமது இரக்க சிந்தையை பலவீனம் என அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டார்கள். பாதுகாப்புப் படையினருக்கு எதிராக தமது பலத்தை அவர்கள் தப்புக் கணக்குப் போட்டார்கள்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டவும் மக்களின் சேவை நிலையங்களை பாதுகாக்கவுமே பாதுகாப்புப் படையினர் அங்கு நிலைகொண்டுள்ளனர்.

இராணுவத்தீர்வை நாம் ஒருபோதும் நாடவில்லை. மக்களுக்குப் பாதுகாப்பை மாத்திரமே நாம் அளிக்கின்றோம். மக்களின் உரிமைகளையும் சலுகைகளையும் நாம் பாதுகாக்கின்றோம்.

துப்பாக்கி வேட்டுகளுக்கும் வாக்குரிமைக்கும் இடையேயான போராட்டமே இன்று நடைபெறுகிறது.

நாட்டின் இறைமை, ஒற்றுமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கவே நாம் சகல முயற்சிகளையும் எடுத்து வருகின்றோம் இவ்விடயத்தில் நாம் சமரசம் செய்து கொள்ளப்போவதில்லை.

பேச்சுவார்த்தைகளுக்கு இன்னமும் வாய்ப்புள்ளது என்பதை தெட்டத் தெளிவாகக் கூற விரும்புகின்றேன். இதனை விரும்பும் எவரும் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்வதற்கு இன்னமும் வாய்ப்பு உண்டு.

பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழி இன்னமும் இறந்தே உள்ளது.

துப்பாக்கி வேட்டு மூலம் அதிகாரத்துக்கு வரவிரும்புவோர் ஜனநாயகஅரசியலில் ஈடுபட்டு வாக்குகள் மூலம் அதிகாரத்துக்கு வர முடியும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ECALOM

மனோகராச் சந்தி, :-: யாழ்ப்பாணம்.

**91 A/L** பொருளியல்-உதயன்

**18** வருட கடந்தகால வினா - விடை

**வகுப்புக்கள் ஆரம்பம்: 09 - 03 - 1991**

சனி - ஞாயிறு — 2-00 மணி

சனி - ஞாயிறு — 3-00 மணி

[பணம்] [வர்த்தக மாற்றுவீதம்]

**A/L 92**

கணக்கியல் - சௌந்தி

✱ பரீட்சை மீதி - லா / நட்ட க / கு

சனி - ஞாயிறு — 3-4 மணி

பொருளியல் - உதயன்

✱ கேள்விக் கோட்பாடு

சனி - ஞாயிறு — 5 00 மணி

**ஆரம்பம்: 09 03-1991**

★ வினா-விடை வகுப்புகள் இலவசம்.

[16070]


# புதுமைப் பெண்ணை உருவாக்கும்......

[1ஆம் பக்கத் தொடர்ச்சி] கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

இன்று அனைத்துலக மகளிர் தினம் முழு உலகமுமே இன்றைய தினத்தைப் பெண்ணினத்தின் எழுச்சி நாளாகக் கொண்டாடுகிறது.

யுகம் யுகமாக ஆணாதிக்க அடக்குமுறையின்கீழ் ஒடுக்கப்பட்டுவந்த பெண்குலம் சம உரிமைக்காக, சமத்துவத்திற்காக, சமூக நீதிக்காக குரலெழுப்பும் புரட்சிகர தினம் இது. பெண் விடுதலையின் வரலாற்றுத் தேவையையும், அவசியத்தையும் இன்றைய தினம் குறித்து நிற்கிறது.

இந்தப் பெண் எழுச்சி தினம் இன்று தமிழீழம் எங்கும் கொண்டாடப்படுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எமது சுதந்திர இயக்கத்தின் ஆரம்பகாலம் தொட்டே பெண்விடுதலையை ஒரு பிரதான இலட்சியமாக நாம் வரித்துக்கொண்டோம். பெண்கள் விழிப்புற்று, எழுச்சிகொண்டு, தமது சொந்த விடுதலைக்காகவும், தேசத்தின் விடுதலைக்காகவும் போராட முன்வரும் போதுதான் அந்தப் போராட்டம் ஒரு தேசிய போராட்டமாக முழு வடிவத்தைப் பெறும் என்ற உண்மையை நாம் அன்று தொட்டே உணர்ந்திருந்தோம்.

நாம் ஒடுக்கப்பட்டுவரும் ஒரு மக்கள் இனம் அந்நியனின் அடக்குமுறையால் நாம் அழிக்கப்பட்டு வந்த போதும் எமக்குள்ளே, எமது சமூக வாழ்வில் நாம் எம்மவர்களையே சமமான முறையில் அடக்கி ஒடுக்கி வருகிறோம். இப்படியாக எம்மத்தியில் நிலவி வரும் ஒரு ஒடுக்குமுறை வடிவம்தான் பெண் ஒடுக்குமுறை.

பழமைவாதத்திலும், மூடநம்பிக்கைகளிலும் ஊறிப்போன எமது சமூக அமைப்பில், நீண்ட நெடுங்காலமாக பெண்ணினம் ஒடுக்கப்பட்டு வருகிறது. எமது வேதாந்தங்களும், மதசித்தாந்தங்களும், மனுநீதி சாஸ்திரங்களும் அந்தக் காலந்தொட்டே பெண் அடிமைத்தனத்தை நியாயப்படுத்தி வந்திருக்கின்றன.

ஆணாதிக்கம், சாதியம், சீதனம் என்று பல்வேறு பரிமாணங்களில் இந்த ஒடுக்குமுறையானது பெண்களின் வாழ்க்கையை ஊடுருவி நிற்கிறது. அவர்களது வாழ்க்கையை சிதைத்து வருகிறது.

## தேசியப் போராட்டம்

எமது சமூகத்தின் சனத்தொகையில் பெரும்பான்மை இடத்தை வகிக்கும் பெண்கள் தொடர்ந்தும் அடிமைத்தனத்தில் வாழ்ந்து வந்தால் எமது விடுதலைப் போராட்டத்தை ஒரு தேசிய போராட்டமாக முன்னெடுப்பது கடினம். இதனை உணர்ந்துதான் எமது இயக்கம் பெண் விடுதலையை முதன்மைப் படுத்தியது.

பெண்களை அரசியல்மயப் படுத்த, போராட்டத்திற்கு அவர்களை அணிதிரட்டியது. இவ்வகையில் நாம் தமிழீழ பெண் சமூகம் மத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்த்தி இருக்கிறோம். தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி ஒன்று தமிழீழத்தில் நடைபெற்றிருக்கிறது.

காலம் காலமாக அடுக்களையில் அடங்கிப் போயிருந்த தமிழீழப் பெண்ணினம் இன்று ஆயுதம் ஏந்தி நிற்கிறது. சீருடை தரித்து நிற்கிறது. எதிரியைக் களத்தில் சந்தித்து நிற்கிறது.

காலம் காலமாக தூங்கிக் கிடந்த பெண்ணினம் இன்று விழிப்படைந்து, எமது போராட்டத்தின் ஒரு புரட்சிகர சக்தியாக எழுச்சிகொண்டு நிற்கிறது.

வீரத்திலும், தியாகத்திலும், விடுதலையுணர்விலும் ஆண்களுக்கு எவ்வகையிலும் சளைக்காதவர்கள் இல்லை. என்பதை எமது பெண் போராளிகள் தமது வீரசாதனைகள் மூலம் நிருபித்துக் காட்டி உள்ளனர்.

ஒரு புதுமைப் பெண்ணை, ஒரு புரட்சிகரப் பெண்ணை எமது விடுதலை இயக்கம் படைத்திருக்கிறது.

தமிழீழத்தில் இந்தப் பெண் புரட்சி தொடர வேண்டும். மேலும் மேலும் புரட்சிப் பெண்கள் எமது விடுதலை இயக்கத்தின் பின்னால் அணிதிரள வேண்டும். போராட்டம் மூலமாகவே நாம் தேச விடுதலையையும், பெண்விடுதலையையும் வென்றெடுக்க முடியும்.

## போராட்ட சூழலில்

நாம் ஒரு சாதாரண சூழலில் ஒரு சாதாரண வாழ்க்கையை வாழவில்லை. நாம் ஒரு போராட்ட சூழலில் வாழ்கிறோம். போராடினால் தான் எமக்கு வாழ்வுண்டு, விடிவுண்டு, வருங்காலமுண்டு என்ற ஒரு நெருக்கடியான நிர்ப்பந்தத்திற்குள் வாழ்கிறோம். நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் போராட்டமே எமது வாழ்க்கையாகவும், வாழ்க்கையே எமது போராட்டமாகவும் மாறிவிட்டது. இந்த எதார்த்தமான வரலாற்று நிர்ப்பந்தத்திலிருந்து யாருமே தப்பிக் கொள்ள முடியாது. அப்படி தப்பிக்கொள்ள முனைபவர்கள் தேசாபிமானம் கொண்டவர்கள் அலர்.

## சவாலை ஏற்போம்

இன்றைய யுத்தத்தின் தீச்சுவாலைகள் எல்லோரையும் தீண்டிவருகின்றன. ஆண் பெண் என்ற வேறுபாடின்றி, சாதியவர்க்க வேறுபாடின்றி, சிறியோர் முதியோர் என்ற வேறுபாடின்றி, எல்லோரையும் தீண்டி வருகிறது. இது எமது இனத்திற்கு எதிராக எமது தினத்தை அழிக்கும் நோக்கத்துடன் நடத்தப்படும் யுத்தம். இந்த யுத்தத்தை நாம் அசட்டைசெய்ய முடியாது. இந்த யுத்தத்தில் இருந்து நாம் ஒதுங்கிக் கொள்ளவும் முடியாது. இந்த யுத்தத்தை நாம் துணிவுடன் எதிர்கொள்வதைத் தவிர எமக்கு வேறுவழி இல்லை.

நாம் ஒன்றுபட்ட மக்களாக, ஒரே தேசிய சக்தியாக அணிதிரண்டு எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும். மலைபோல உறுதியுடன் நாம் ஒன்று குவிந்து நின்றால் எம்மை எத்தகைய சக்தியாலும் அழித்துவிட முடியாது.

இந்த தேசிய ஒற்றுமையையும் இன ஒருமைப்பாட்டையும் ஒருவலுவான அத்திவாரத்தில் கட்டி எழுப்புவது என்றால் எம்மத்தியில் நிலவும் ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்படவேண்டும் சமூக முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டும். சமூக அநீதிகள் அழிக்கப்படவேண்டும். ஆண்-பெண் என்ற பாலியல் அடிப்படையில் தோற்றம் கொண்ட பாரபட்சங்கள் அகற்றப்படவேண்டும்.

அனைத்து தமிழ் மக்களும், ஒரே இனம் என்ற தேசாபிமான உணர்வுடன் போராட்டத்தில் பங்குகொண்டால் எமது விடுதலை இலட்சியம் வெற்றி பெறுவது நிச்சயம்.

சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு சமதர்ம சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதே எமது போராட்ட இலட்சியம். பெண்கள் சம உரிமை பெற்று. சகல அடக்குமுறைகளிலிருந்தும் விடுதலை பெற்று, ஆண்களுடன் சமத்துவமாக, கௌரவமாக வாழக்கூடிய புரட்சிகரமான சமுதாயமாக தமிழீழம் அமையவேண்டும் என்பதே எனது ஆவல்.

பெண்களின் எழுச்சி தினமாகிய இன்று உலகப் பெண் இனத்தின் உரிமைப்போராட்டங்களுக்கு எனது ஆதரவையும் ஆசியையும், தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]


# 90-ம் நாள் நினைவஞ்சலி





| | |
|---|---|
| **க. கணபதிப்பிள்ளை ஞானப்பிரகாசம்** [இளைப்பாறிய ஆசிரியர்] | **க. ஞானப்பிரகாசம் அன்னம்மா** |
| **தோற்றம்: 01 01-1900** | **பிறப்பு: 21 07 1916** |
| **மறைவு: 08-12-1978** | **இறப்பு: 09-12-1990** |

எம்மை உருவாக்கி, உயர்வாக்கி விட்ட எமது அன்புத் தெய்வங்களை நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

10-12-1990 அன்று நடைபெற்ற எமது தாயாரின் மரணச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், பருத்தித்துறைப் பங்குத் தந்தை. அருட் சகோதரிகள், பாடல் குழுவினர் மற்றும் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

எமது தாயாரின் 90ஆம் நாள் நினைவஞ்சலியை முன்னிட்டு கற்கோவளம் புனித செபஸ்தியார் ஆலயத்தில் 09-03-1991 சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு நடைபெறும். திருப்பலியிலும் அதைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் தேநீர் விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள். மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

க. ஞா. அல்போன்ஸ், கற்கோவளம், பருத்தித்துறை.

[15035]



# மரண அறிவித்தல்

## திரு. நாகலிங்கம் நடராசா

[இளைப்பாறிய அதிபர்]

புங்குடுதீவு திரு. நா.நடராசா அவர்கள் 6-3-91 இல் காலமாகிவிட்டார். இவர் இளைப்பாறிய அதிபர் திருமதி. சிவபாக்கியம் நடராசா [நயினாதீவு] அவர்களின் அன்புத் துணைவரும், டாக்டர் சுசீலா [கனடா], கலோசனா பி. ஏ. [நெடுந்தீவு மக வித்தியாலயம்], சுகுமார் [கட்டடபொறியியலாளர் கனடா], சுரேஸ்குமார் [ஜேர்மனி], சுரேரன் [லண்டன்], சுமங்கலா [இராமநாதன் பல்கலைக் கழக இறுதிவருட மாணவி] ஆகியோரின் அன்புத்தந்தையும், உமாபதிசிவம் [கனடா], ஞானசவுந்தர் [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாரும், பவித்திரா [கனடா] வின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 9-3-91 சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, மணற்காடு மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. சதானந்தன்.
[மைத்துனர்]

'சிவபதி', 3ம் வட்டாரம், புங்குடுதீவு.

கணக்குப் பரீட்சகர், கணக்காய்வு உப-அலுவலகம், மாநகரசபை, யாழ்ப்பாணம்.

[16069]



# முன் மாதிரிப் பயிற்சிப் பரீட்சை

**Proto - Type. Practice Examination.**

[தடைப்பட்ட பரீட்சைகளுக்கான]

**A/L - 90** 01 - 04 - 1991 முதல்

இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல் பாடங்களுக்கான பகுதி I இறுதிய பயிற்சிப் பரீட்சை.

★ O/L 90 — 25-03-91 முதல் விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி பாடங்களில் பகுதி II இற்கான பரீட்சை எம்மால் 20-2-91இல் நடாத்தப்பட்டது. மேற்படி பாடங்களில் பகுதி II,ம் கணிதம், ஆங்கிலம், சமயம், வர்த்தகம், மனைப்பொருளியல், சுகாதாரம், விவசாயம், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான I, II-ம் பரீட்சை நடாத்தப்படும்.

★ ஆண்டு 5 [புலமைப்பரிசில் பரீட்சை] 23-03-91 பி. ப. 1-00 கணிதம் தமிழ் ஆகிய பாடங்களுக்கான பயிற்சிப் பரீட்சை நடாத்தப்பட்டு, வினாத்தாள் தெரிவு செய்த ஆசிரியரால் இலவச கருத்தரங்கும் நடாத்தப்படும்.

★ எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பரீட்சை, இலவச கருத்தரங்கில் பங்குபற்றலாம்.

★ பரீட்சைக்கான பெறுபேறுகள் தரப்படும்.

★ இப்பரீட்சைகளை நடாத்த விரும்பும் நிறுவனங்கள் 15-03-91 இற்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:

**Examination Unit**

*Bond Institutes*

58.A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[16049]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியிலுள்ள கட்டைப்பிராய் பகுதியில் 10 பரப்புக் காணியும், நல்லூர் செல்லர் வீதியில் வீடு கட்டக்கூடிய 4½ பரப்புக் காணியும், லேதமெஷின்கள், தகடு வெட்டும் கட்டர், என்பனவும் விற்பனைக்கு உண்டு. பரஸ்தோர் ஸ்தாபனம், முத்திரைச் சந்தை, நல்லூர். [16038]

நிலஅளவை, உபகரணங்கள் விற்பனைக்குண்டு. திருமதி ஈ. திருஞானசம்பந்தர் "உமாபதி" 621, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, யாழ்ப்பாணம். [16023]

மில்க்வைற் ஸ்நானப் பவுடர் எண்ணெய் முழுக்குக்கென இயற்கைச் சாதனங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டது. பக்கெற் ஒன்று ரூ 1/50 மட்டுமே. இணுவில், திருநெல்வேலி, யாழ். நகர் அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. [சி/5820]

### தேவை

ஆடவர்களின் உடைகளை சிறந்த முறையில் தைக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த ஆண் அல்லது பெண் தையல்காரர்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். விக்ரம் ரெயிரலிங் மார்ட், 208/1, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். [வெலிங்டன் சந்திக்கு அருகாமை] [16052]

பாவித்த நல்லநிலையிலுள்ள Standard Size Typewriters தேவை. Contact School of Business Administration 16, 3rd Cross Street, Jaffna. [C/5823]

யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிறுவனத்திற்கு கணக்கியல் லிகிதர் (Accounts Clerk) தேவை. முன் அனுபவம், தகைமைகளுடன் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி: 188, மே/பா உதயன். [சி/5824]

### வீடு தேவை

மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளும் கொண்ட வீடு தேவை. தொடர்பு கொள்ளவும்: சிவா ஸ்ரோர்ஸ் 425, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [16064]

### O/L விஷேட பரீட்சை (1991)

1990 Dec. இல் நடைபெற்ற O/L பரீட்சை வினாத்தாள் தொகுதி [ஆங்கில வினாத்தாள், சமூகக்கல்வி படவேலை வினாத்தாள் அனைத்தும் உட்பட] விற்பனையாகிறது. ஆங்கில வினாத்தாள் தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம். சொற்ப பிரதிகளே கைவசம் உண்டு. விவரங்களுக்கு: எக்ஸ்றல் இன்ஸ்ரிரியூட் இருபாலைச் சந்தி. [16068]

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம், 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [16037]

### புளொக் புகைப்படம்

புளொக் [Block] புகைப்படம் - றப்பர்சீல் - கலர்படம் - ஓவியம் - பிறேம்போடுதல் - கலர் பிலிம் சுருள்கள் - ஸ்ரிக்கேஸ் முதலியவற்றிற்கு நாடுங்கள்: கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். [சி-5814]

### ஆங்கிலக்கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும், உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். S. ஜெயராஜா, 204 மவிட்டபுரம் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். [16051]

### 'இருள் இரவில் அல்ல'

மீரா வெளியீடு சிதம்பர திருச்செந்திநாதன் எழுதியது. "எந்த ஒரு பெண்ணும் இளம் வயதில் கணவனை இழக்கக்கூடாது இழந்தால்" வித்தியாசமான நாவல் துர்க்கா சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, பிக்பென்ஸ் [B] கிளிநொச்சி, யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும். [16028]

## Northern Institute of Business Studies

தெல்லிப்பழையில் இயங்கி வந்த எமது நிறுவனம் தற்போது உடுவில் [மருதனார்மடம் சந்திக்கு அண்மையில்] "செல்வபதி"யில் திரு. கே. ஜெ செல்லத்துரை அவர்களின் வீட்டில் இயங்கி வருகிறது. Pitsman London பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் தயவுசெய்து 15 - 3 - 91 அன்று அல்லது அதற்கு முன்பாக எம்மைச் சந்திக்கவும்.

செல்வி இந்துமதி துரைராஜா
நிர்வாகி

1991 - 03 - 07

[14924]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
27-10-1932

உதிர்வு:
6-2-1991



### அமரர் அருணாசலம் சின்னராஜா

[முன்னாள் சின்னத்துரை அன் பிரதர் ஊழியரும், தற்போதைய அங்கசபாசா பிள்ளையார் மரக்காலை லிகிதரும்]

எம் இதய தீபமே! எம் குடும்ப ஒளி விளக்கே! எம்மை வழி நடத்திய அன்புத் தந்தையே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

58, வைரவர் கோவில் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

[160…]

## தேசிய கல்வி நிறுவனம், மஹரகம

### பட்டப் பின்படிப்பு கல்வி டிப்ளோமா பயிற்சி நெறி (1991-93)

மேற்படி பயிற்சி நெறியைப் பயில விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பட்டதாரி ஆசிரியர்களாகப் பணிபுரிபவர்களும், பட்டதாரிகளாக உள்ள அதிபர்கள், விரிவுரையாளர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோரும் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்களாவர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்தவிண்ணப்பதாரர்களுக்கு யாழ்ப்பாணத்திலேயே பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

விண்ணப்பதாரர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாக இருக்க வேண்டும்.

28 - 02 - 1991 இல் 50 வயதுக்கு உட்பட்டவராக இருப்பது அவசியம்.

பயிற்சி நெறிக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. சேவையில் இருந்து கொண்டே பயிற்சி பெறலாம்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவம் போல ஒன்றைத் தயாரித்து, தெளிவாக நிரப்பி 22-03-1991க்கு முன்னர் —

கல்வி முகாமைத்துவ ஆலோசகர், கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கலாநிதி திருமதி பி. காரியவாசம்,
கல்வி மாஅதிபதி,
ஆசிரியர் கல்விப் பிரிவு,
தேசிய கல்வி நிறுவனம், மஹரகம.

02-03-1991.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. முழுப் பெயர்:
2. முகவரி
   தனிப்பட்டது:
   அலுவலகம்:
3. பிறந்த திகதி:
4. ஆணா/ பெண்ணா:
5. பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்ற திகதி / வேறு பதவியில் உள்ளவராகில் நியமனத்திகதி:

விண்ணப்பதாரரின் ஒப்பம்

திகதி:

அதிபரின் அத்தாட்சி:

[சி-5826]

### திருத்தி வாசிக்கவும்

7-3-91 உதயனில் வெளியானமுத்துச்சாமி மகேஸ்வரன் அவர்களின் மரண அறிவித்தலில், கொழும்பு புவனேஸ்வரி, ராணிபவளகாந்தி, தமயந்தி என்பவர்களின் மைத்துனரும் ஆவார் என்று திருத்தி வாசித்துக்கொள்ளவும்.

தகவல்:
கந்தப்பிள்ளை நிர்க்குணானந்தன்

[16066]

## வலதுகுறைந்த இளைஞனுக்கு தையல் இயந்திரம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்திய இளைஞர் மாநாட்டின்போது வலதுகுறைந்த இளைஞர் ஒருவருக்குத் தையல் இயந்திரம் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.

கொற்றாவத்தையைச் சேர்ந்த சி. தரனீதரன் என்ற வாய்பேசமுடியாத இளைஞருக்கு 6,590 ரூபா பெறுமதியான புதிய தையல் இயந்திரம் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்த இளைஞருக்குச் சேவாச்சிரமத்தில வைத்து ஏற்கனவே தையல் பயிற்சிஅளிக்கப்பட்டிருந்தது.

விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. வை. கா. சிவப்பிரகாசம், இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்ட மாணவர்களுக்குப் பரிசில்களாக விவேகானந்தர் நூல்களை வழங்கினார்.

விழாவுக்கு டாக்டர் மு. க. முருகானந்தன் தலைமைவகித்தார். [அ]

### விவசாயம் பாதிப்பு

கடற்படை ரோந்து மற்றும் இராணுவ அச்சுறுத்தல்களினால் சுருவிலை அண்டிய கரையோரப் பகுதியான தணுவிலில் பல விவசாயிகள் பயிர்ச்செய்கையைக் கைவிட்டுள்ளனர். இப்பகுதியில் இருந்து ஏற்கனவே மக்கள் இடம் பெயர்ந்து புளியங்கூடல் பகுதியில குடியேறி உள்ளனர். [இ-125]

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

### இ. வி. தளையசிங்கம்

[B. A., B. Sc., F. C. A.
பட்டயக் கணக்காளர் [இங்கிலாந்து & வேல்ஸ்]
உரிமையாளர் E. V. தளையசிங்கம் & கம்பனி
[கொழும்பு — யாழ்ப்பாணம்]

தோற்றம்:
13 - 01 - 1933

உதிர்வு:
17 - 02 - 1990

திதி: 08 - 03 - 1991

எண்ணம் பெருக்கெடுக்க இமயம்போற் துன்பலைகள்
நண்ணி நலிக்க நம் நாமாய் இல்லை ஐயா!
வருமோ ஒன்று ஒரு நூறு எம் துயர்கள்!
கழியுமா எக்காலும் கழியாதே, உங்களது
ஆன்மா ஈடேற்றம் அடைவதற்காய் இராப்பகலாய்
அர்ச்சித்தே நிற்கின்றோம் அரனார் திருப்பதங்கள்

மனைவி, மக்கள்.

வீமன்காமம், தெல்லிப்பழை.

[16061]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இந்தியாவில்...

ஆசியாவின் இரண்டாவது மிகப் பெரிய நாடான இந்தியாவின் பிரதமராக, 117 நாட்கள் மட்டுமே பணிபுரிந்த சந்திரசேகர் தமது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார். அதனால் அங்கு புதிதாக அரசியல் நெருக்கடி தோன்றி உள்ளது. இந்திய மக்கள் 15 மாதங்களின் பின்னர் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலை உருவாகி உள்ளது.

இந்திய நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் பத்தில் ஒரு வீதமானவர்களை மட்டுமே கொண்ட சந்திரசேகரின் ஜனதா தள் [எஸ்] கட்சி, ஆட்சிக் கட்டில் ஏறிய போதே அதன் ஸ்திரத்தன்மை குறித்து எல்லோரும் சந்தேகித்தது உண்டு.

ஆயினும், புதிய தேர்தல் ஒன்றைத் தமது இந்திரா காங்கிரஸ் எதிர்கொள்வதற்கான காலம் கனியும் வரை, மக்கள் ஆதரவை அணி திரட்டுவதற்கான காலத்தை வாங்குவதன் பொருட்டு, திரு. ராஜீவ் காந்தி. சந்திரசேகர் அரசுக்கு ஆதரவளிக்க முன்வந்தார்.

நிபந்தனையற்ற ஆதரவு அளிப்பதாக அவர் வெளிப்படையாகக் கூறிக் கொண்ட போதிலும், தமக்குத் தேவையான காரியங்களைச் செய்விப்பதற்குச் சந்திரசேகரைப் பயன்படுத்தினார். அஸாம், தமிழ்நாடு அரசுகள் கலைக்கப்பட்டமை அதற்கு நல்ல உதாரணங்கள்.

1989 இறுதியில் நடந்த பொதுத்தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அமோக பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லை. அப்போதே அந்த அரசியல் நிலையாமைக்கு, ஸ்திரமின்மைக்கு வித்திடப்பட்டுவிட்டது.

அந்தத் தேர்தல், காங்கிரஸ் தவிர்ந்த மாற்று அரசை அமைக்க இரண்டாவது சந்தர்ப்பத்தை வழங்கியது. ஆனால் 1977இல் மொரார்ஜி அரசு ஒரு சீர் இல்லாமல சிதறியது போலவே இம்முறையும் ஆயிற்று.

இந்தியாவில் காங்கிரஸ் தான் ஸ்திரமான ஆட்சி அமைத்து அரசு நடத்த முடியும்; ஏனைய கட்சிகளால் இயலாது என்ற தன்மை, தவறு, இழைக்கப்பட்டு வருகிறது. இந்த நிலைப்பாடு தொடருமானால், இந்தியா பல கட்சி ஆட்சிமுறை உள்ள சனநாயக நாடு என்ற நிலைப்பாடு பெயரளவில் மட்டுமே பொருந்தும். நடைமுறையில் அது ஒரு தனிக்கட்சி ஆட்சி முறை [Totalitarian] நாடாகவே கொள்ளப்பட வேண்டும். இதற்கு இந்திய மக்களும், அரசியல்வாதிகளும் ஒத்துழைக்கப் போகிறார்கள் என்றால் எவரும், எதுவும் செய்ய இயலாதே!

## பன்னாட்டுப்படைச் செலவு 2,80,000 கோடி ரூபா

42 நாட்கள் நடந்த வளைகுடாப் போரில் பன்னாட்டுப் படைகளுக்கு ஏற்பட்ட செலவு 7 ஆயிரம் கோடி டொலர் என்று அறிவிக்கப்படுகிறது. [இலங்கைப்பணத்தில் இது 2 லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபா ஆகும்]

இத்தொகையில் 60 ஆயிரம் கோடி ரூபாவை தாம் பொறுப்பேற்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

## செய்தியாளர் வெளியேற்றம்

பக்தாத் நகரில் உள்ள சகல வெள்நாட்டுச் செய்தியாளர்களையும் இன்று வெள்ளி காலைக்குள் நாட்டைவிட்டு வெளியேறும்படி ஈராக் அரசு அறிவித்துள்ளது.

## தீர்வு காண இதுவே தருணம் ஜனாதிபதி புஷ் கூறுகிறார்

அரபு - இஸ்ரவேல் தகராறுக்குத் தீர்வு காணும் தருணம் வந்துவிட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேற்று அறிவித்தார்.

வளைகுடாப் போர் வெற்றியை அறிவிக்குமுகமாக ஜனாதிபதி புஷ் அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

## கண்ணி அகற்ற 6 மாதம்

★ குவைத் பிரதேசத்தில் ஈராக் படைகள் புதைத்து வைத்துள்ள நிலக்கண்ணிகளையும், வளைகுடாக் கடலில் விதைத்துள்ள கடல் கண்ணிகளையும் முற்றாக அகற்றுவதற்கு ஆறு மாதங்கள் பிடிக்கும் என்று அமெரிக்க பாதுகாப்புப் படைத் தளபதிகளில் ஒருவரான ஜெனரல் ரிச்சர்ட் நீல் சொன்னார்.

## மனித உரிமை மீறல் பற்றி ஐ.நா. பிரதிநிதி விசாரணை

★ ஈராக்கிய படைகள் மேற்கொண்ட மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் பற்றி நேரில் விசாரணை நடத்த ஐ. நா பொதுச் செயலாளர் விசேஷ பிரதிநிதி ஒருவரை குவைத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

## சதாமின் சகோதரர் உள்துறை அமைச்சரானார்

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனின் ஒன்றுவிட்ட சகோதரரான அபுல்ஹசன் அஹாஜி என்பவர் ஈராக்கின் புதிய உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

முன்னர் குர்டிஷ் இனத்தவரின் கிளர்ச்சியை அடக்க இரசாயன ஆயுதங்களை பாவிக்கும்படி உத்தரவிட்டவர் இவரே,

## ஈழ அகதிகள் விரும்பினால் தாயகம் திரும்பலாமாம்

சென்னை, மார்ச் 8

இலங்கைத் தமிழ் அகதிகள் விரும்பினால் தாயகம் திரும்பிச் செல்லலாம்.

தமிழ்நாடு அகதிகள் மறுவாழ்வு சிறப்பு ஆணையாளர் சி எம். இராம்தாஸ் கடந்த புதன்கிழமை செய்தியாளர்களிடம் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

போராளிகளுடன் தொடர்பு கொண்டவர்கள் என்ற சந்தேகத்தில் ஆயிரத்து 875 இலங்கைத் தமிழ் அகதிகள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் இவர்களில் போராளிகளுடன் தொடர்பு இல்லாதவர்கள் என்று காணப்படும் இலங்கைத் தமிழ் அகதிகளை விடுதலை செய்வது குறித்து தமிழக அரசு பரிசீலனை செய்து வருவதாகவும் திரு. இராம்தாஸ் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள 286 முகாம்களையும் பொலீஸார் கண்காணித்து வருகின்றனர்.

அகதிகள் மறுவாழ்வுக்கு என 18½ கோடி ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் 15 கோடி ரூபாவை மத்திய அரசு வழங்கியுள்ளது என்று [illegible] னார்.

## நேற்று நடந்த குண்டு வீச்சில்

# கொக்குவில் பகுதியில் இளைஞன், இளம்பெண் பலி

கொக்குவில், மார்ச், 8

கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மேற்குப் பகுதிகளில் நேற்றுப் பிற்பகல் 2-45 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுக்களை நடத்தின.

கொக்குவில் மேற்கில் இளம் பெண் ஒருவரும், கொக்குவில் கிழக்கில் இளைஞர் ஒருவரும் உயிரிழந்தனர்.

கொக்குவில் கிழக்கில் தலையாளி ஞான வைரவர் கோவில் குண்டு வீச்சில் சேதமானது. பரிவார மூர்த்திகளில் ஒன்றான சந்தான கோபாலர் கோவில் இருந்த இடம் தெரியாது முற்றாக அழிந்தது.

ஸ்ரீ ஞான வைரவர் கோவில் கும்பாபிஷேகம் — கடந்த ஜூன் 13 ஆம் திகதி — வடக்கு - கிழக்கு போர் ஆரம்பமான காலத்தில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கொக்குவில் மேற்கில் தளையசிங்கம் தேவநாயகி [20 வயது] என்பவரும், கொக்குவில் கிழக்கில் திருகோணமலையைச் சேர்ந்த யே. வி. பொன்சேகா யோசவ் மெயிற்லன் [24 வயது] என்பவருமே உயிரிழந்தவர்கள் ஆவர்

இராமச்சந்திரன் மனோஜா [15 வயது], சுப்பிரமணியம் மங்கையர்க்கரசி [38 வயது], அவரது மகன் சந்திரமோகன் [20 வயது], அமிர்தநாயகம் யோசேஸ்வரன் [19 வயது], செல்வநாயகம் பரமேஸ்வரி [45 வயது], மார்க்கண்டு புஷ்பராணி [22 வயது], ஞானானந்தன் இராசமலர் [30 வயது] ஆகியோர் காயமடைந்தனர்.

இரண்டு இடங்களிலும் இரு வீடுகள் முற்றாகச் சேதமாகின. மற்றும் 7 வீடுகள், ஒரு நெல் குற்றும் ஆலை, சைக்கிள் கடை என்பனவும் சேதமடைந்தன,

[ஓ-69-15-3-143]

# பொம்மர் குண்டினால் இராணுவ 'சென்றி' சேதம்

## ஆனையிறவில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச்8

ஆனையிறவு முகாம் பகுதியில் நேற்று பொம்மர்கள் குண்டு வீச்சு நடத்திய போது ஒரு குண்டு இராணுவ 'சென்றி' யின் மேல் விழுந்து வெடித்தது. 'சென்றி' அழிந்தது.

நேற்றுக் காலை 6.30 மணியளவிலும் 7.30 மணியளவிலும் புலிகள் முகாம் பகுதியை நோக்கி சினைப்பர் தாக்குதல்களை நடத்தினர்.

அதைத் தொடர்ந்து காலை 7 30 மணி தொடர்க்கம் பகல் 10 மணிவரை இயக்கச்சி பக்கமாக கடும் ஷெல் மற்றும் கலிபர் தாக்குதல்களை படையினர் நடத்தினர்.

3 பொம்மர்கள், 4 ஹெலிகளின் உதவியுடன் இராணுவத்தினர் முகாமைவிட்டு வெளியேறவும் முற்பட்டனர்.

விடுதலைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதலை நடத்தி படையினரை பின்வாங்கச் செய்தனர்.

நேற்று நடந்த தாக்குதல்களில் படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்கள், சேதங்கள் குறித்து தெரியவரவில்லை.

இதே வேளை நேற்று நண்பகலுக்குப் பின்னரும் உமையாள்புரம் பகுதியில் விமானக் குண்டு வீச்சு இடம்பெற்றது.

[ஓ-15]

# வல்வை, தொண்டமானாரில் படகுகள் மீது தாக்குதலாம்

கொழும்பு, மார்ச் 8

வல்வெட்டித்துறை மற்றும் தொண்டமானாறுப் பகுதிகளில் இரண்டு படகுகளை கடற்படையினர் தாக்கி அழித்ததாக கொழும்பில் ஆயுதப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

வல்வெட்டித்துறைச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் ஏழு பேரும் —

தொண்டமானாறுச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் ஐந்து பேரும் கொல்லப்பட்டதாகவும் ஆயுதப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

# தமிழ்க் குழுவின் அலுவலகம் கொழும்பில் முற்றுகை!

கொழும்பு, மார்ச் 8

தமிழ்க் குழு ஒன்றின் கொழும்பு அலுவலகம் பொலீஸாரின் திடீர் சோதனைக்கு இலக்கானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கிருந்து பொலீஸ் சீருடைகளையும் மற்றும் சில துஸ்தர் வேஜுகளையும் பொலீஸார் கைப்பற்றினர் என்றும்-

சிலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்லைக் கந்தளாய் மோதலில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், மார்ச் 8

திருகோணமலை மாவட்டம் அல்லைக் கந்தளாய் ஆற்றுக்கு அருகில் கடந்த செவ்வாயன்று விடுதலைப் புலிகளும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் எதிர்பாராத வகையி சந்தித்துக் கொண்டபோது மோதல் ஏற்பட்டது.

இந்த மோதல் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியானார்.

ரி 81 ரக துப்பாக்கி — ஒன்று, மகலின்—4. ஜே. ஆர். ரக கிரனேற் — 1 ஆகியவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். [உ]

## அம்பாறை பகுதியிலும் 3 படையினர் மரணம்

கொழும்பு, மார்ச் 8

அம்பாறை மாவட்டத்தில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று படையினர் பலியானார்கள் . இருவர் காயமடைந்தனர்

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சிறில் ரணதுங்கா நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். [ஓ-3]

## தெற்கில் தேர்தல்

கொழும்பு, மார்ச் 8

வடக்கு - கிழக்கு மாகாணத்தை தவிர, ஏனைய மாகாணங்களில் மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இம் மாதம் 21 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ராஜீவின் நிபந்தனை!

புதுடில்லி மார்ச் 8

உளவு விவகாரம் தொடர்பாக ராஜீவ் காந்தி விதித்த இரண்டு நிபந்தனைகளையும் பிரதமர் சந்திரசேகர் ஏற்றிருப்பின் தற்போதைய அரசியல் நெருக்கடியே ஏற்பட்டிருக்காது. சந்தர்ப்பத்தை சந்திரசேகர் தவறவிட்டுவிட்டார்.

—இப்படி மத்திய அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி பி.பி சிக்கு தெரிவித்தார்.

ஹரியானா பொலீஸ் அதிகாரிகள் இரண்டு பேர் சிவில் உடையில் ராஜீவ் காந்தியின் இல்லத்தைக் கண்காணித்த சம்பவம் தொடர்பாக ராஜீவ் காந்தி விதித்த இரண்டு நிபந்தனைகளையும் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி வெளியிட்டார். அவையாவன:-

ஒன்று:- ஹரியானா மாநில முதலமைச்சரையும், உள்துறை அமைச்சரையும் பதவி விலகும்படி பிரதமர் சந்திரசேகர் நிர்ப்பந்தித்திருக்க வேண்டும்.

இரண்டு:- ராஜீவ் காந்தியின் இல்லத்தைக் கண்காணிக்கும்படி இரண்டு பொலீஸாருக்கும் துணைப் பிரதமர் தேவிலாலின் மகன் ஓம்பிரகாஷ் சௌதாலா உத்தரவிட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு பற்றி பூரண விசாரணை ஒன்றுக்கு பிரதமர் சந்திரசேகர் உத்தரவிட்டிருக்க வேண்டும்.

## உளவு வேலையின் பின்னணியில் சௌதாலா

புதுடில்லி, மார்ச் 8

ஜனதா தள் [எஸ்] பொதுச்செயலாளர்களில் ஒருவரான ஓம்பிரகாஷ் சௌதாலா தான் எனது வீட்டை வேவு பார்க்கும்படி ஹரியானா பொலீஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி முன்கண்ட தகவலை செய்தியாளரிடம் நேற்று வெளியிட்டார்

இது பற்றி தெரிவித்த பின்னரும் அவர் மீது பிரதமர் சந்திரசேகர் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றும் திரு காந்தி சொன்னார்.

தேர்தலை எந்நேரமும் சந்திக்கத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் சொன்னார்.

## மகளிர் தின நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

சர்வதேச மகளிர் தினத்தை யொட்டிய கருத்துரைகளும் கலை நிகழ்ச்சிகளும் இன்று மாலை மூன்று மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கின்றன.

இந்த நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ள பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், மகளிர் தினத்தை யொட்டி அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது. [ஓ-3]

## ஐந்நூறு தொகுதிகளில் போட்டியாம்!

புதுடில்லி, மார்ச் 8

பொதுத் தேர்தல் நடந்தால் எனது கட்சி ஐந்நூறுக்கு அதிகமான தொகுதிகளில் போட்டியிடும்

பிரதமர் சந்திரசேகர் நேற்று ஜனதாதள் [எஸ்] ஊழியர்கள் கூட்டம் ஒன்றில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

## ஈ.பி.டி.பி. சந்திப்பு

கொழும்பு, மார்ச் 8

ஈழ மக்கள் ஜனநாயக முன்னணித் [ஈ. பி டி. பி.] தூதுக் குழு ஒன்று கடந்த புதன்கிழமை ஜனாதிபதி பிரேமதாஸா மற்றும் புதிய பாதுகாப்புத் துணை அமைச்சருமான பிரதமர் டி. பி. விஜேதுங்காவையும் சந்தித்துப் பேசியது. [உ-எ]

## காலையில் மட்டும் எக்ஸ்றே

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரியில் ''எக்ஸ்றே'' படம் பிடிப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது ஒரேயொரு 'எக்ஸ்றே' இயந்திரம் மட்டும் இயங்குகிறது. மின் விநியோகமும் குறைவாகவே உள்ளது. அதனாலேயே 'எக்ஸ்றே' படம் பிடிப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணி வரை மட்டும் மிகவும் அவசரமான சிகிச்சைக்கும், சத்திர சிகிச்சைக்கும் உட்படுத்தப்பட வேண்டிய நோயாளருக்கு மட்டுமே 'எக்ஸ்றே' படம் பிடிக்கப்படுகிறது என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. [அ-15]

## பீரங்கி தாக்குதல்

கடந்த ஞாயிறுகாலை 5:30 மணிக்கு வடமராட்சி நாகர் கோயில் கடலிலிருந்து ஸ்ரீலங்கா கடற்படைப் படகு ஒன்று தரைப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்தியது. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தம்பாப்பிள்ளை கந்தசாமி

[ஓய்வு பெற்ற அதிபர்]

மூளாயைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் 7-3-1991 அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் வடிவாம்பாள் அவர்களின் அன்புக் கணவரும், திருமதி நல்லநாயகி, திருமதி கதிரநாயகி [ஆசிரியை, வட்டு. கார்த்திகேய வித்தியாசாலை], திரு நல்லைநாதன், திரு. சிறிகாந்தா, திருமதி சுபமங்களாதேவி, திரு. சந்தனவரதானந்தன், திரு. சிறிதரானந்தன், திரு விக்கினேஸ்வரன், திருமதி பூமகள், திருமதி ரகுதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வ. குமாரவேல், காலஞ்சென்ற கு. தர்மலிங்கம், திருமதி சுபத்திராதேவி, திருமதி பரிமளாதேவி, திரு. சு. தங்கத்துரை, திருமதி சந்திராதேவி, திருமதி பாக்கியலட்சுமி, திரு. தவராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 8-3-1991 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணியளவில் அவரது வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
குடும்பத்தினர்
வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.
[15697]

## திருமதி மயில்வாகனம் ஞானம்மா

திருமதி மயில்வாகனம் ஞானம்மா 7-3-91 நேற்று சிவபதம் எய்தினார்.

அன்னார் காலம் சென்ற இ. மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், திருமதி ச. அன்னபூரணம் [ஆசிரியை], திருமதி த. தேவி, காலஞ்சென்ற தங்கவேல் ஆகியோரின் அன்புத் தாயாரும், க. சண்முகராசா [ஆசிரியர்], இ. தவராஜலிங்கம் [கொக்குவில் மேற்கு, பத்திரிகை முகவர்] அன்பு மாமியாரும், ச. செல்வக்குமரன் [ஜேர்மனி], செந்திற்குமரன் [நோர்வே], ச. திருக்குமரன் [யாழ். கல்லூரி வட்டுக்கோட்டை], த. தவசீலன் [இத்தாலி], த. தவராஜினி, த. தாரணி, த. தனுஜா [கொக்குவில் இந்துக் கல்லூரி] ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று காலை 10. 30 மணிக்கு நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைக்காக அராலி தெற்கு, பூனாவடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்,

தகவல்:
இ. தவராஜலிங்கம்
உடையார் ஒழுங்கை,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. [15699]

## செல்லையா நமசிவாயம்

செல்லையா நமசிவாயம் 04-03-91 இல் லண்டனில் காலமானார்.

இவர் முன்னாள் கிளிநொச்சி கச்சேரி, கடன் வழங்கு சபை ஆகியவற்றின் கணக்காளரும், கமலமலரின் அன்புக் கணவரும், விஜயகுமாரி, அருந்ததி, சுகந்தன், அரவிந்தன், இளங்கோ, ஆகியோரின் அன்புத் தந்தையும், த. திருநாவுக்கரசு, ம. அருண்குமார், ஆனந்தன், ஈஸ்வரி, சு. ஜெகதீஸ்வரன், சு. கோணேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், அர்ஜுன், ஆதவன், அகிம்ஸா ஆகியோரின் பேரனாரும், காலஞ்சென்ற திருமதி புவனேஸ்வரி, சுப்பிரமணியம், செ. பாலசுந்தரம் [அரச நில அளவையாளர், யாழ்ப்பாணம்.] ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லையா- செல்லம்மா அவர்களின் மூத்த மகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 06-03-91 இல் லண்டனில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
செ. செல்லம்மா [தாய்]
செ. பாலசுந்தரம் [தம்பி]
65, நெடுங்குளம் வீதி.
அரியாலை,
யாழ்ப்பாணம்.
[15700]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 08-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.